(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்களை வரன் முறைப்படுத்துகிற இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

புது தில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியின் வளர்ச்சியில் என் தலைமையில் அமைந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. எந்த வகையில் எல்லாம் தமிழுக்கு சிறப்புச் செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம் தமிழை வளர்க்க உறுதி பூண்டிருக்கிறது இந்த அரசு. இவ்வரசின் "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற குறிக்கோளுக்கிணங்க, தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்து வருகின்றது.

முற்பகல் 11-35

ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த உறுதி பூண்டுள்ள இவ்வரசு, மைய அரசின் ஆட்சி மொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்கவும், தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவும் வேண்டுமென்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக, அனைத்து சாத்திய முறைகளிலும் தமிழ் மொழியினைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அவ்வகையில், மற்ற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கைகள் தோற்றுவிக்க நல்கைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தற்போது இயங்கி வரும் உலகத்